# நினைவலைகள்



அமரர் பூபாலன் சுதாகரன்

சுண்ணாகம், தமிழீழம்

08 - 04 - 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமரர் பூபாலன் சுதாகரன்

உறவு

01

11

63



அகல்வு

08

04

03

எங்களுக்கும் உங்களுக்கும் இடையே
இடைவெளி என்பது
காலத்தின் கற்பனை.
உள்ளே நீ உள்ளாய்
என்பதே நாமாகிய உண்மை
வணங்குகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்



**கணபதி துதி**

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

**திருஞானசம்பந்தர் அருளிச்செய்த தேவாரம்**

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிரும்மே

**திருநாவுக்கரசர் அருளிச்செய்த தேவாரம்**

சிவன் என்னும் நாமம் தனக்கே உடையசெம் மேனி எம்மான்
அவனெனை ஆட்கொண் டளித்திடு மாகில் அவன்தனையான்
பலன்எனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னாள் அழைத்தால்
இவன் எனைப் பன்னாள் அழைப்பு ஒழி யான் என்று எதிர்ப்படுமோ

**சுந்தரர் அருளிச்செய்த தேவாரம்**

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட்துறையுள்
அத்தா உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே

**மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகம்**

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புறங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருமந்திரம்

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்ஒல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழத்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே
அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே – அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பா மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமூ வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பஷ்த்தொடு ரஷித்தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய வொத்துப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கரு டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்தரப்பவு ரிக்குத் ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே

## தாயுமானவர் பாடல்

எத்தனை பிறப்போ எத்தனை இறப்போ
எளியனேற்கிதுவரை அமைந்தத
அத்தனை எல்லாம் அறிந்தநீ அறிவை
அறிவிலி அறிகிலேன் அந்தோ
சித்தமும் வாக்குந் தேகமும் நினவே
சென்மமும் இனியெனால் ஈற்றாது
வைத்திடிங் கென்னை நின்னடிக் குடியாய்
மறைமுடி இருந்த வான்பொருளே



## இராமலிங்கவள்ளளார்

மாலுந் துஞ்சுவான் மலரவன் இறப்பான்
மற்றை வானவர் முற்றிலும் அழிவார்
ஏலும் நற்றுணை யார்நமக் கென்றே
எண்ணி நிற்றியோ ஏழைநீ நெஞ்சே
கோலும் ஆயிரங் கோடி அண்டங்கள்
குலைய நீக்கியும் ஆக்கியும் அழிக்கும்
நாலு மாமறைப் பரம்பொருள் நாமம்
நமச்சிவாயங் காண்நாம் பெறுந்துணையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

***தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி***
***அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே – எல்லை***
***மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்***
***திருவா சகம்என்னும் தேன்***

நமச்சிவாய வாஅழ்க நாதன்தான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர்! கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்(கு) ஒளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன' புகழுமா(று) ஒன்றறியேன்
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுள் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கனலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்(து) அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்(பு)அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்(து)உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையென் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து)உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நிலகழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே
மா(சு)அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்(று)அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவு இலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்தில் ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்(கு) அன்பானே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்(து)என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்துமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்(று)இன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்(கு) உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ வென்று என்று
போற்றிப் புகழ்ந்(து)இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்(டு)இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்(டு)அழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்(று)ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே – எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்*
*திருவா சகம்என்னும் தேன்*

*திருச்சிற்றம்பலம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி. பூபாலன் சுதாகரன் அவர்களின் மண்ணுலக வாழ்க்கை

**யாழ்ப்பாணம் சுண்ணாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட பூக்கண்டர் சின்னத்துரை நல்லம்மா தம்பதிகளின் மூத்த மகன் பூபாலன் கமலாதேவி தம்பதியினரின் மூத்த மகன் சுதாகரன் அவர்களின் மறைவு குறித்து நினைவு கூறும் முகமாக இவ் நினைவஞ்சலி**

பூபாலன் கமலாதேவி தம்பதியினரின் ஐந்து புத்திர செல்வங்களில் மூத்த புதல்வராக திரு சுதாகரன் அவர்கள் 01–11–1963 இல் சுண்ணாகம், கச்சநாவலடியில்(இனுவில்) பிறந்தார்.

இவருடன் நான்கு சகோதரர்களாக மூன்று தம்பிகளும் ஒரு தங்கையுமாக இப் புண்ணிய பூமியில் அவதரித்தார்கள்.

அவர்களுள் கமலாகரன் சுவிஸிலும், பிரபாகரன், அகிலா(ராஜி), கிருபாகரன் ஆகியோர் ரொரண்ரோவில் தந்தை, தாயாருடன் வாழ்ந்து வருகின்றனர்.

அன்னார் மதனிகா(கமலாகரன் – சுவிஸ்), சாந்தினி(பிரபா – தமிழீழம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

தந்தையார் பூபாலன் அவர்கள் கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பிரதம லிகிதாராக(CC) கடமையாற்றிய காரணத்தால் இவரின் ஆரம்ப பாடசாலை வாழ்க்கை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்தது. பின்பு சுண்ணாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியில் தனது இளமைப்பருவ பள்ளிப்பாடங்களை தொடர்ந்தார்.

இவரின் இளமைக்கால வாழ்க்கையில் இவரது திறமைகள் எழுத்தாற்றலிலும், கவிதை, கட்டுரை எழுதும் கருத்தாற்றலிலும் கரையிண்றி புரண்டோடியது.

துள்ளித்திரிந்த வாலிபப் பருவத்தில் இவரது தோளுக்கு ஏற்றம் தந்த விவசாய வேலைகள் கூட இவரது வளமான வாழ்க்கைக்கு வழித்துணையாக வந்து போனது.

பாடசாலை நாட்களில் பலவித கவிதை மேடைகளைக் கண்டுகொண்ட இவரது எளிமையான தோற்றம் ஆசிரியர்களிடமும், சக மாணவர்களிடமும், மற்றைய நண்பர்களிடமும் எளிமையாகவே தோற்றம் அளித்தார்.

ஆரம்பக் கல்வி படிப்படியாகி கல்விப் பொது உயர்தர பரிட்சையில் சித்தியெய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு 1984 இல் அராபிய தேசத்து கட்டார் நகரில் எட்டு வருடங்கள் தொழில் புரிந்தார். அதன் பின் 1992 இல் பிறந்தகம் வந்த இவரின் பெருமையை கண்டுகொண்ட தாய், தந்தையர் இவரின் மண வாழ்க்கைக்காக பத்தைமேனி வைரவர் கோவிலடியை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும்கொண்ட திருவாளர் கந்தசாமி(துரை) – இரத்தினம்மா(கிளி) தம்பதியினரின் ஐந்து புத்திர செல்வங்களில் இரண்டாவதும், பெண் செல்வங்களில் மூத்தவருமான சுமதியை 04–05–1992 இல் திருமணம் செய்து கொண்டர்.

இவர்களின் இளமை வாழ்க்கையில் இன்பமயமான பிள்ளைச் செல்வங்கள் மூவரை பெரும் பேறாக பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுள் மூத்தவர் பார்த்தீபன்(9) இரண்டாமவர் சுவேதா(8) அன்னார் 2001 இல் கனடா வந்து தன் இனிய குடும்பத்தாருடன் இணைந்து வாழ்ந்த இன்ப வாழ்வில் மூண்றாவதான பிள்ளைச் செல்வன் பவித்திரன் 11–05–02 இல் பிறந்தார். இவர்கள் அனைவருடனும், தாயார், தந்தையார், மற்றைய சகோதர சகோதரியுடனும் மற்றும் மாமியார் கிளியக்கா, மைத்துனர்கள் பிரபாகரன்(ஜயா) சுபாகரன், முரளீதரன், பிரியங்கா ஆகியோருடனும் சக உரிமங்கள் கவிதா(ஜயா) ராஜசுகிர்தினி (சுபா) ஆகியோருடனும் மருமக்கள் பிரணவி, பிரவீன், பெறாமக்கள் அபிஷா, சகிதன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அணைவருடனும் அன்பாக சேர்ந்து வாழ்ந்த அன்னார் சுதாகரன் அவர்கள் 08–04–2003 அன்று உறக்கநிலையில் பெரும் உறக்கம் பெற்றுவிட்டார்.

மண்ணுலக வாழ்வில் அன்னார் பெற்றுக்கொண்ட
ஆத்ம திருப்தி அனைத்தையும் போல்
விண்ணுலகில் அவரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிராத்தித்துக் கொண்டு
இவ்வுலக வாழ்க்கை வரலாற்றை நிறைவுசெய்கின்றோம்

***சுதாகரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய***
***மலர்ப் பாக்கள் கொண்டு***
***கண்ணீர்ப் பூக்கள் எடுத்து***
***அவர் பாதச்சுவடுகளில்***
***பதியம் செய்கின்றோம் .***

**பூக்களுடன் பூக்களாக நாங்கள்**
**சுதாவின் புனித உறவுகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் கண்ணீப் புலம்பல்


வாழ்க்கை எனும் பாதையில் வழிநடந்தோம்
பாதையிலே பல சுகங்கள் பார்த்து வந்தோம்
காத துரம் கூட கலங்கவிடாத கண்மணியே
வாழ்க்கைப் பாதையிலே பாதி வழியை ஏன் மறந்தீர்

சுத்தமாக சுற்றத்தாரோடு பற்றி வாழ்ந்தோம்
சத்தமாக சிரித்திடாமல் நெற்றி சுருக்கி
பற்றிய கையோடு பாதை காட்டிய நல்லவரே
ஏற்றிய விளக்கை ஏன் அணைத்து வைத்தீர்
எடுத்தெனக்கு இயம்புமையா

சொந்தமாகி பந்தமாகி வாழ்ந்து வந்தோம்
சொக்கமாகி வாழ்கை நிலை மாறி வந்தோம்
பந்தமாகி வாரிசுகள் பாதையிலே நிற்குதையா
பள்ளம் ஒன்றை ஏன் அளித்தீர்
பாதை வேறு இல்லையையா

நீராகி நானாகி நாமாகி வாழ்ந்தோமையா
நாமாகி நல்லவற்றை நாளெல்லாம் சேர்த்தோமையா
பாளாகிப் போன காலன் பகலிலே வந்திடாது
இரவினிலே வந்ததனால்
என் இதயத்தை இழந்தேனையா


வாழ்க்கையினை நானிழந்தேனென்றால்
வாழ்ந்திருப்பேன்
சேர்த்ததெல்லாம் உம்மால்தான்
சேர்ந்ததெல்லாம் உம் அன்பால்தான்
வாழ்ந்ததெல்லாம் உம்மால்தான்
வாழ்வும் உமதன்பால்த்தான்
தாழ்வு இன்று வந்ததையா
தனவானே உம் பிரிவால்தான்
எல்லாமே இன்று போனதையா
நீர் எனைப் பிரிந்து போன சேதியாலே



நால்வருமாய் நாங்களிங்கே
நாளை என்ன தெரியவில்லை
காலை வந்து போனதென்று
கதைக்கும்போது அறிகின்றோம்
மாலை வந்தும் மாறவில்லை
மாமலரே உம் நினைவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை ஒன்றைத் தேர்த்தெடுத்து
விரைவாக வாருமையா
விடிவு வேண்டும் வேதுகின்றோம்
வேதனையைத் தீருமையா
நாளை இந்த நறுமலர்கள்
கேள்வி என்னைக் கேட்கும்போது
என்ன பதில் சொல்லிடுவேன்
என்று எண்ணி வாடுகின்றேன்
பண்ணிவைத்த புண்ணியங்கள்
பாவமாகிப் போனதாலே
கண்ணிமையே நீங்கள் எம்மை
கலங்க வைத்து சென்றீரோ
சொல்லி அழ யாருமில்லை
சோகம் என்னை நீங்கவில்லை
நீங்கள்தானே எல்லாம் என்று
நீங்கிடாமல் நான் இருந்தேன்
நீங்கி என்னைச் சென்றதெங்கே
நெஞ்சமெல்லாம் துன்பமையா
தஞ்சம் உந்தன் காலடியில்
இறக்கி வைக்க வேண்டுமையா



குஞ்சுகளாய் குழந்தைகளோடு
நெஞ்சம் இங்கு வெடிக்குதையா
பிஞ்சுகளை தேற்றுவதற்க்கு
பேதை எனக்குப் போதவில்லை
ஐந்து பேராய் வாழ்ந்திடுவோம்
கெஞ்சுகிறேன் வாருமையா
பிஞ்சுகளின் பாசக்குரல்
நெஞ்சில் வந்து நெருடுதையா
பாசமாக வாழ்ந்த எங்கள் நேசக்கதவுகளை
பாசக்கயிறு வந்து திறந்ததுவோ
வாசம்செய்த எங்கள் வாழ்கை சுகமதனை
மோசம் செய்யவென்று முழு இரவில்
வேடக் காலடியை காலன் கொண்டு வந்து
நேசக் கதவுகளில் நெட்டி உதைத்தனனோ
நேரம் வந்து போகுதையா
நீர் வந்து சேரக்காணோம்
பாரம் வந்து சேருதையா
பாதை ஒன்றும் காணோமையா
தூரம் போன துணைவனாரே
துள்ளி ஓடி வந்திடுவீர் துயவனாரே
சோரம் போன வாழ்க்கையினை நாங்கள்
சேர்ந்து வாழ்ந்து முடித்திடுவோம்.

*வரவை எதிர்பார்த்து மனைவி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் மலர் முகங்கள்

அல்லி விழி எரியுதப்பா
சொல்லி அழ முடியவில்லை
தள்ளி வந்து நான் படுக்க
இன்று நீங்கள் இல்லையப்பா
சொல்லிவிட்டு போகும் நீங்கள்
வேலை முடிந்து வந்தபோது
துள்ளி வந்து உங்கள் தோளில்
தொங்கி ஏற ஆசை வந்து நான்
இங்கு உம்மைத் தேடுகின்றேன்
எங்கு போனீர் சொல்லுமப்பா
ஏன் சொல்லாமல் போனீரப்பா
இல்லை எனக்கு பசி என்று சொன்னபோது
நல்லது நான் எம்முக்கு போறேன்
முதலில் அம்முக்குட்டி சாப்பிடுங்கோ என்று
அன்பாக உணவுண்ண வைத்த அப்பாவே
இன்று எனக்கு பசிக்குதப்பபா
எம்மில் இருந்து எப்ப வருவீர்களப்பா
துங்கும் உங்கள் நெஞ்சில் ஏறி
துள்ளும் எங்கள் இடிகள் தாங்கி
வாழ்ந்த எங்கள் அன்பு அப்பா
இடிகள் இன்று எங்கள் நெஞ்சிலப்பா
நாங்கள் இடிந்துபோனோமப்பா
படியாதிருக்கும்போது அடிப்பதற்காய்
சும்மாவேனும் கை துக்கும் அப்பா
நாங்கள் இன்று படிக்கவில்லை
வந்தெங்களை தண்டியுங்களப்பா
படிகளில் நாங்கள் ஏறும்போது
விழுந்திடுவோமோ என துடிதுடிக்கும் அப்பா
இன்று விழுந்து விழுந்து துடிக்கின்றோமப்பா
துக்கி எங்களை தோள்களில் போடுங்கப்பா
தங்கை தம்பி வெம்பும்போது
என் கை வந்து துடைக்கவில்லை
கண்கள் நிறந்த நீரை எந்தன்
கைகள் துடைக்கும் நேரம்தன்னில்
அம்மா வந்து நிற்கும் போது
இணைந்தே ஏழ்மையானோம்
துய்மை எண்ணம் உள்ள அப்பா
துரம் நீங்கள் போனதாலே
நாளை வருவீர்கள் என்று நாங்கள் இங்கு
நேரம் பார்த்து காத்திருக்கின்றோம்.

*அன்பான பிள்ளைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயாரின் தாளாத சோகம்

தாயார் என்ற ஸ்தானத்தை முதலில் எனக்களித்தவரே
சேயாக நான் உம்மைப் பெற்றெடுக்க செய்த தவம்
இன்று நோயாகிப் போனதையா
என்றும் தீராத நோயாகிப் போனதையா
காயாத உம் பாச நினைவுகளை
நான் எந்த தேசத்தில் சென்று தொலைப்பேன்
பாசக்கொடியே பவளச் செடியே
காலன் உன்னை நாசம் செய்துவிட்டான்
பாலன் உன் பால்வடியும் பூமுகத்தில்
காலன் வந்து கால் வைக்க ஏனையா
நேரம் கொடுத்தீர்
நெஞ்சு பொறுக்குதில்லையையா
தஞ்சம் இனி எனக்குத் தர
இங்கு வந்து வாழுமையா
கொஞ்சம் நீர் உந்தன்
குரலெடுத்து கூப்பிட்டிருந்தால்
அம்மா நான் வந்து அவன்
கால்களுக்கு அடிமையாகியிருப்பேன்
நஞ்சும் உண்டிருப்பேன் உம்மை
நானிலத்தில் வாழ வைத்திருப்பேன்
தஞ்சம் அவனென்று
என்னைத் தவிக்கவிட்டு சென்றீரோ
'ஈன்றபொழுதில் பெரிதுவக்கும்
தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாயாக'
நீர் என்னை வாழவைத்தீர்
நான் உம்மை ஈன்றெடுக்க வேதனையே படவில்லை
இன்றென்தன் அடிவயிற்றில்
ஏனையா எரிதனலை ஏற்றி வைத்தீர்
சரியான பாதை கண்டு
தெரியாத விடயம் தெரிந்து
குறியாக இருந்தீரே குலக்கொழுந்தாக வாழ்ந்தீரே
அழியாத சோகம் தந்து
ஆற்றாத துயரம் தந்து
வழிமாறி வானுலகை சென்றடைந்த விடி விளக்கே
மறு படியாகி நீர் வந்து மானிடனாய் பிறந்தெங்கள்
பழி பாவம் தீருமையா
வழிமேல் விழியாலே வாசல் அமைத்து
காத்திருக்கின்றேன்.

*அன்புடன் அம்மா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் உள்ளக் குமுறல்

தம்பி நீர் மூத்தவராய் தரணியிலே தவழ்ந்தபோது
நம்பி இருந்தேன் நீர் என்னை மிஞ்சிடாரீர் என்று
வெம்பி வெதும்புகிறேன் வேலவப்பெருமானே
கோலமெல்லாம் கலைந்திங்கு நான்
வாழும் நிலை உணர்ந்து

வண்ண நடை நடக்க நீர்
சின்னக் கால்களை எடுத்தபோது
என் எண்ண அலைகள் உம்
நடை முன்னே வந்து நின்று
பள்ளம் பார்த்து பாதை பார்த்து
சொல்லித்தந்தேனே
இன்று எனக்கு முன்பே நீர்
ஏனையா பறந்து சென்றீர்

நான் சொல்லிச்சொல்லி வாழ்ந்திருந்தேனே மற்றவரிடம்
நீர் சொல்லாமலே சென்றுவிட்டீர்
சோகம் மட்டும் விட்டு விட்டு
அள்ளாமல் குறையாது
இல்லாமல் புகையாது என்பதுபோல
நீர் இல்லாமல் எரியுதையா
இதயத்துள்ளே புகைச்சலையா

இருந்ததொன்று இல்லையெனும்போது
இருப்பது எதுவுமே
இருப்பதாய் தெரிவதில்லை என் மகனே
வாழ்ந்த ஒருவர் மறைந்து போனதாலே என் மாமலரே
நோயாளியாகிப் போனேனையா
நோயும் நீரே மருந்தும் நீரே
வருந்தும் அப்பாவின் வாழ்வின் நோய் தீர
வந்துதித்து வாருமையா
உம் வரவுக்காக காத்திருப்பேன்.

*அன்புடன் அப்பா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களின் தாங்கொணாத்துயர்

அண்ணாவே அன்பின் திருவிளக்கே
பண்பாக எம்மை அழைத்து
பாசத்தோடு எமை அணைத்து
நேசமாக நேர் வழிப்படுத்தியவரே
தூய மனம் படைத்த நேயரே
நாங்கள் உங்களை காயப்படுத்தியிருந்தால்
நியாயப்படுத்தி நல் தண்டனை தந்திருக்கலாம்
நியாயமில்லாத் தண்டனை தந்து
ஞாலத்தில் இருந்து சென்றுவிட்டீர்கள்

பாயை எடுத்து நாங்கள்
பலரும் ஒன்றாக தூங்க
பல கதைகள் சொல்லி
எங்களைப் பயமின்றி தூங்க வைத்த
நீங்கள் இன்று
துக்கத்தில் இருந்து துயிலு முன்பே
எங்களுக்கு ஏக்கத்தை வைத்துவிட்டு
எங்கே அண்ணா சென்றடைந்தீர்கள்

நோயுங்களை அணுகியிருந்தால் நாங்கள்
நால்வரும் வந்துங்கள் அருகினில் இருந்தெங்கள்
வாழ்வதனை வழங்கியிருப்போம்
யார் கண்டது காலன் வந்துங்களை
கவர்ந்து செல்வானென்று


சிறப்புடனே நீங்கள் சிரிப்புடனே வாழ்ந்த உங்கள்
வனப்புகளை வாரிக்கொண்டு சென்ற காலனவன்
கணக்கதனை கழித்துக்கொள்ள முடியுமெனில் நாங்கள்
முனைப்புடனே முனைந்திடுவோம்
அவன் வாழ்வை முடித்துவைப்போம்

நெஞ்சினிலே
நீர் என்ன சிந்தனையை சேர்த்துவைத்தீர்
அஞ்சிடாமல் சொல்லிடுவீர்
நாமதனை எங்கள் நெஞ்சினிலே தாங்கிடுவோம்
கொஞ்சமேனும் குறைவு வராமல்
உம் நினைவுகளை நாம் சுமப்போம்
நெஞ்சம் எங்கள் உயிர் மூச்சை
நெட்டித்தள்ளி வீழ்த்தாதிருக்கும்வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சிடாதீர் அண்ணி பிள்ளைகளுக்கு யாருமில்லை என்று
தம்பி நாங்கள் தங்கையுடனே அரவணைப்போம்
அம்மா அப்பா அருகிருந்து உயிர் கொடுப்போம்
எப்ப நீங்கள் வந்துதிப்பீர்கள் என்பதனை
எங்களுக்கு சொல்லிடுவீர் வாசல்வந்து தங்கி உள்ளோம்.

*பாசத்தம்பிகளுடன் தங்கை*



## சகோதரனின் உள்ளக் குமுறல்

விடிந்த பல பொழுதுகள் அன்று விடியவில்லை
பிறந்த இந்த வருடம் சிறக்கவில்லை
விழுந்தது இடியொன்று சித்திரை எட்டில்
உலகமே இருண்டது அந்தக் கணத்தில்
பலதுரம் பறந்துவந்தோம் பதறியடித்து
வருமுன்னே எங்கு சென்றீர் சிறகடித்து

பல்லாண்டு வாழ் என்று வாழ்த்தியவரில்
யாரோ பத்தாண்டு வாழ் என்று வாழ்த்தினரோ
அறியாத பிஞ்சுகள் அருண்டன உங்கள் நிழலை பார்த்து
அவை வளர்ந்தபின் கேட்கும் நியம் எங்கே என்று

புரியாத இந்தக் கேள்விக்குப் பதில் புரியவில்லை
அது புரிந்தும்தான் நிலவென்ன திரும்பிவருமா?
ஆனால் அந்நிலா எப்போதும் ஒளிவீசும் எல்லார்முன்னும்.

*பாசமுடன் கிருபா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவினர் இதயக் குமுறல்கள்

அன்பான அத்தானே
முத்தான முகவழகே நாங்கள்
இன்று பித்தாகிப்போய் விட்டோம்
சொத்தான எங்கள்
சொந்தத்தை தொலைத்துவிட்டு

அத்தானே உங்களை நாங்கள்
அப்பாவாய் பாதுகாத்தோம்
எங்கள் வாழ்வில் இழந்ததை
உங்கள் மூலமாக பெற்றுக் கொண்ட
பேரானந்தத்தினாலே

ஆனந்தப் பூங்காற்று
வெட்டவெளியெங்கும் வீசும்போது
உங்கள் மூச்சுக்காற்றுக்கு
ஒரு துளி காற்றுத்தர மறுத்த
இயற்கையை எம் இதயம்
ஏளனம் செய்கின்றது
காற்றோடு கலந்துவிட்ட
கண்ணான எம்முயிரே



பார்த்துப் பார்த்து
நாங்கள் கண்ட இன்பமெல்லாம் இப்போது
வேர்த்து வேர்த்து வீணாய் போகின்றது
நேற்றைய பொழுதில் நீங்கள்
சேர்ந்து வாழ்ந்த இந்த வீடு
சூழ்ந்துவிட்ட துயரத்தாலே
இருளாளே நிறைந்துள்ளது

அண்ணர் ஒருவர் இல்லையென
நாம் அழுத கண்ணீர் உங்கள்
அன்பான இதயத்தாலே தீர்ந்ததென்று
பன்னீரினால் பாதம் கழுவி பாதுகாத்த
எங்கள் அப்பாவே அண்ணாவே
கண்ணீரின் அளவு தெரியாமல் நாங்கள்
மூழ்கி முக்காடுகின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தானாய் அப்பாவாய் அண்ணாவாய்
வாய் நிறைய நாங்கள் அழைத்து மகிழ்ந்த
முத்தான சுதாகரனே
பத்தாதையா நாங்கள் வாழ
பந்தபாசம் நீர் வேண்டும்
வற்றாத பாச மழையே
நனைகின்றோம் கண்ணீரில்
கரை சேர்க்க வாருமையா

நண்பன் ஒருவன் வந்தெங்கள்
தங்கையை மணங்கொண்டு
மனம்கோணா வாழ்வு தந்த மதி அழகே
கண்கள் உம்மைத்தேடுதையா
காண வழி சொல்லுமையா
போன வழி தெரியுமையா
போனதெங்கே சொல்லுமையா

பாதை தெரியா பாவியாகி
நாங்கள் இங்கே பரிதவிக்க
காத துரம் நீர் நடந்து போகவெண்று
காலன் உம்மை
சேதி எதுவும் சொல்லாமலே
சிறைபிடிக்க சென்றனீரோ
நாதியற்று நாமலைவதை
நல்லவரே அறிந்திடுவீர்

சுமதி அவளை சுகமாக
வாழவைக்க எண்ணிய எங்களது
அமைதி வாழ்வையும்
அக்கினியில் வேகவைத்து சென்றவரே
மனதினிலோர் மழுங்கடிப்பு
வந்திடாது பாதுகாத்தோம்
இன்றோ எம் மனதினிலே
இடியல்லவா குடி கொண்டுள்ளது

படியேறி நீர் வந்து
பார்வைக்கு தெரிந்துவிட்டால்
அடி பிளறி நாங்கள் தந்த
அன்பான மதிப்பெல்லாம்
மடி அவிழ்ந்து விழுந்துவிட்ட
நெல்லிக்கனிபோல் சிதறுதையா
கடி சொல்லே சொல்லிடாத
கனிவான அப்பாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுநாளாய் நோன்பிருந்து
நெடுஞ்சாணாய் வீழ்ந்து வணங்கி
வரும் பாதை காத்திருந்து
வந்துவிட்ட செய்தி கேட்டு
தடுமாறி நாங்கள் வந்து
தாங்கிக்கொண்டு வீடு வந்து
வருடம் இரண்டுகூட வரவில்லையே
போனதெங்கே சொல்லுமையா

எங்கள் அன்பில் குறை ஏதாவது
உங்கள் மனதில் உறைத்திருந்தால்
வாடா இங்கே என்று
வாய் நிறையக் கூப்பிட்டெங்கள்
தாய் தந்தையராய் தண்டித்திருக்கலாமே
இவ்வளவு தண்டனையை
எதுக்கையா தந்து சென்றீர்

கவிதா உம்மைக் கண்டால்
அண்ணனை வரச்சொல்லுங்கள்
அமுதுண்டு புறப்படலாமென
உரக்க உரைக்காமல்
ஓரமாய் நின்றுரைத்த அன்பை ஏன்
பாரமாய் இருந்ததென்று
பதில் ஏதும் சொல்லாமல் சென்றீரையா
காரமாய் இருந்திருந்தால்
கனிவாக உரைத்திருப்பீர்
பாரம் அன்பாக இருந்ததனால்தான்
பண்பானவரே கண் காணாமல்
காற்றோடு கரைந்தீரோ
காலம் இனி காண வைத்திடாதோ

பாரம் எல்லாம் சுமையாகி இங்கு
யாரும் உள்ளம் இருப்பதாய் நினைத்து
வாழவில்லை வாழ்வும் இல்லை
தாழ்ந்த தலையணையாய் எங்கள்
வாழ்வு தூங்குதையா நீங்கள்
வந்தெங்கள் வாழ்வைத் தாருமையா

அம்மா அவரையோ ஆற்ற யாருமில்லை
சும்மா எதுவென்றாலே துயராகஎண்ணுவர்
இன்று உண்மை இதுவென்று
அவர் தன் தன்மை மறந்து
தலை தலையாய் அடிக்கின்றாரே
தங்கமே வந்திடுவீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்வை இளவயதில்
தொலைத்தவரின் தலைக்குள்ளே
பெண் வாழ்வை புகுத்திடவோ
போதுமான இடமில்லை
விண்ணிலே புகுந்தவரே
விடியவில்லை இரவுகளும் உறவுகளும்
படியேறி வாருமையா
பார்த்திருப்போம் விடியும் வரை

தம்பிமார் இருவரையும்
தாங்கிக்கொண்ட தனவானே
வெம்பி அழுகின்றனரே
வேற்றிடம் சென்றிடவோ பாதையில்லையெண்று
போற்றி வணங்குகின்றனர்
போன இடம் சொல்லவென்று
ஆற்றி வைத்து வாழ்ந்திடுவீர்
அருகிருந்து வளர்த்திடுவீர்

மாற்று மூச்சை உமக்களிக்க
என் மனதாலே உமைத்தாங்கிக்கொண்டு
மாடி இறங்கி ஓடி வந்தேனே
ஏனையா ஏமாற்றிச் சென்றீர்
செயற்கை காற்றை உமக்களிக்கு முன்
என் இயற்கை மூச்சை எடுத்துக்கொண்டு
நான் பறந்து வந்தபோது
ஏனையா இறக்கையை விரித்து
விண்ணுலகம் சென்றீர் இன்பப்புறாவே

பிரியமாய் வாழ்ந்து வந்த
பிரியாவோ இன்று உம்மை
பிரிந்துபோய் எரிந்துகொள்கின்றாளே
அரியதாய் அத்தானாய்
நீர் ஒருவர்தானென்று
பெரியதாய் வாழ்ந்து வந்தவள்
இன்று உம் பிரிவால்
சிறியதாகி சிதைந்து போகின்றாள்

அல்லாடிய உம் மூச்சுக்காற்றை
அலைக்கழியாமல் பிடித்து வைக்க
வைத்தியரை வாய் வார்த்தையால்
வசைபாடி ஓடிந்து நின்றாளே
கசையடியாய் உம் பிரிவு
மேனியெங்கும் எரியுதையா
காணில் இனி எங்கு செல்வாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனில் ஊறிய தெள்ளமுதே
சகோதரி இவள் சுமதிக்கோ
அமைதி கொள்ள நான்
கனதி கொண்ட நெஞ்சினாலே
கதைகள் பல சொன்னாலும்
மறதி வந்து மறைத்திடுமோ
மறைவு கொண்ட திருமேனியே
உறவு சொல்லி நான் எது சொன்னாலும்
உம் வார்த்தை போல் வந்திடாது
வந்து வார்த்தை சொல்லுமையா
வாழவைத்து பாருமையா

அவர் வாழ்வில் கண்ட வாழ்க்கை
உம் கைகளில் வந்ததனால்
பகலாக ஒளியாகி பல பயிராக விளையாகி
கலையாக வாழ்ந்தாளே இன்று
பகல் கூட இருண்டுவிட்டதே
பாவம் அவள் குழந்தை ஐயா
இருட்டினிலே ஏதும் பார்வையுண்டோ
ஏதாவது சொல்லுமையா
பார்வை இருந்தும் குருடானாள்
நீர் பாராமல் போனதாலே
புன் சிரிப்பே மாறாத
புள்ளிமான்கள் மூவரையா
என் இதயம் தள்ளி நின்று வேகுதையா
அள்ளி எடுத்து ஆறுதல் சொல்ல நான்
கொள்ளிமேல் நின்று தவிக்கின்றேனையா

நாளை சொல்லிச் சொல்லி பெருமைப்பட
எங்கள் அப்பாவே
அத்தானே மாமாவே மான்பிமிகு மூத்தோனே
காற்றினில் நீர் கலந்துவிட்டாலும் எங்கள்
இதயக் காற்றினிலே
எப்போதும் வாழ்ந்திடுவீர்
எங்கள் மூச்சுக்காற்று எங்களை மறக்கும்
வரை உங்களை மறவா அனைவரும்.

*மாமியார் கிளி, மைத்துனர்கள், சக உறவுகள்,*
*மருமக்கள், பெறாமக்கள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் உன் வெற்றிடத்தில் நீயே இருப்பாய்........

மகிழ்ந்து கொள்ளமட்டுமே தெரிந்த பள்ளி நினைவுகளுக்குள்ளும், பழகிய நாட்களுக்குள்ளும் நீ இருந்தாய். இனிய நினைவுகளின் களமாக உன் சிரிப்பும் சிந்தனையும் இருந்தன. கிளிநொச்சி மகாவித்தியாலய வளவிலும் விளையாட்டு மைதானத்திலும், கிளிநொச்சி குளக்கட்டிலும் நாம் பதித்த சுவடுகள் இப்போதும் அழிந்துவிடக் காரணங்கள் இல்லை.

மாலையிலும் விடுமுறை நாட்களிலுமாய் கவலைககள் ஏதுமற்று நகர்உலா வந்த அப்பொழுதுகளிலும், ஈரம் உலர்ந்து போகாத அந்த மகிழ்ச்சிகளிற்கெல்லாம் காரணமான பலவற்றுக்கும் நீயும் காரணமாயும், காவலாயும் இருந்தாய்.

மனித வாழ்வியல் மகத்துவம் அதிக மகிழ்வுநிலை அடைவது மாணவப் பருவத்தில்தான்.
எங்கள் மாணவ மகத்துவத்துக்குள்ளும் எல்லா மகிழ்ச்சிகளும் இருந்தன. உன்னைப் போலவே.

மாணவப் பருவத்துக்குள்ளேயே நாம் தங்கிவிட ஆசைப்பட்டாலும் அடுத்த கட்டத்திற்கு நம்மை அடித்து விரட்டியது அப் பருவம்.

கடமைகள் ஆளுக்கொரு திசையில் கூவியழைக்க, மீண்டும் சந்திப்போம் என்ற நம்பிக்கையுடனும் உறுதியுடனும் பெயர் தெரியாத் திசைகளுக்கெல்லாம் பெயர்ந்து போனோம்.

உலகின் ஏதோ ஒரு மூலையில் சிறப்புடன் நாம் இருப்போம் என்ற நம்பிக்கையில் நீயும், அப்படியே நீயும் இருப்பாய் என்ற எண்ணத்தில் நாமும் கடமைகளுக்குள் காணாமல் போனோம்.

காலஓட்டம் ஒருநாள் உன்னை எம் திசைக்கு இழுத்து வந்தது. காலக் கடவுளை வாழ்த்தியபடி பள்ளி நாட்கள் எழுந்து பளிச்சிடப் பார்த்துப் பரவசங் கொண்டோம்.

கட்டுகள் அற்றுத் திரிந்த அந்தக் காலத்தை மனதிற்குள் மகிழ்ந்தபடி, கட்டி வளர்த்தெடுத்த உறவுகளை அறிமுகம் செய்து கொண்டோம். நம் கண்முன்னே நம் குழந்தைகள் கூடி மகிழ அளவிலா ஆனந்தம் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி என்ன.. ஒற்றை மண்ணில்தானே நம் உறவுகள் எல்லாம். அடிக்கடி பார்க்கலாம் பேசலாம் என்ற மகிழ்வோடு அவரவர் கடமைகளில் ஈடுபடலானோம்.

இவ்வாறான நாட்களில் ஒருநாள்.......

நண்பனே... அந்தநாள் பற்றியும் நாம் கொண்ட துயர் பற்றியும் உன்னால் ஒன்றுமே அறிந்திருக்க முடியாது.

நம்மிடை நீ இல்லை என்ற துயரச் செய்தி நம்மை உடைத்தெறிந்ததை நீ உணர்ந்திருக்க முடியாது.

இது எப்படிச் சாத்தியம் என இன்னமும் நம்ப மறுக்கிறது நம் மனம்.

வாழத் தலைப்பட்ட வயதில் சாபமிட்ட கொடியவன் யாரெனப் புரியவில்லை.

கூடியிருந்து கூவியழுகின்றன நம் பள்ளி நினைவுகள்.

எம் மத்தியில் உன்னை நிலைக்க விட விதி விரும்பவில்லை.

ஆனால் உன் நினைவுகளும் சுவடுகளும் எமக்குள் நிரந்தரமானவை.

கடந்த காலங்களில் நாம் எனப்பட்ட எல்லாவற்றுக்குள்ளும் நீ இருந்தாய்.

இனியும் உன் வெற்றிடத்தில் நீயே இருப்பாய்.

*வகுப்புத் தோழர்கள் தோழிகள்*
*கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் என்ற அழகு

மரணத்தைக் கண்டு அழுபவனே!
மரணம் உன் அறியாமையைக் கண்டு சிரிக்கிறது


அரணத்தின் இரக்கமற்ற கை
உனக்குப் பிரியமானவற்றைப்
பிடுங்கிக்கொள்கிறது என்று ஏசுகிறாய்

அந்தப் பிரியமே
மரணத்தால்
உண்டாகிறது என்பதை
நீ அறிவதில்லை

பறிபோகாதவற்றின் மீது
பிரியம் உண்டாவதில்லை

ஒன்றையே பற்றிக்கொண்டிருக்கும்
உன் பார்வைக்கு
மற்றவற்றை அறிமுகம் செய்வது
மரணம்தான்

பகல் மரணமடையவில்லை என்றால்
அழகான நட்சத்திரங்களை
நீ பார்க்கமாட்டாய்



அழகிய மலர்
அற்ப ஆயுளில்
மடிந்து விடுகிறதே என்று
வருந்துகிறாய்

மலரின் அந்த ஆயுள்தான்
அதன் அழகை
நீ அதிகமாக ரசிப்பதற்குக்
காரணமாகிறது

நிரந்தர அழகு
கவர்ச்சியை இழந்துவிடும்

எது அதிக அழகோ
அது விரைவில்
மரணமடைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மரணம் அவலட்சணம் என்று
அருவருக்கிறாய்
ஆனால் நாள்
அதன் மரணத்தில்

அழகாய் இருப்பதை
நீ கவனித்ததில்லையா?

விடியலை அழகு என்கிறாய்
அது இரவின் மரணம் அல்லவா?

புதுமையை வரவேற்பவனே!
பழமையின் மரணம் இல்லையென்றால்
புதுமை ஏது?

மரணம் நஷ்டம் என்கிறாய்
அது லாபமாக இருப்பதை
நீ கவனித்ததில்லையா?



வயலில் அறுவடை என்றால்
மகிழ்கிறாயே
மரணமும்
அதைத்தானே செய்கிறது

மரணம் என்றால்
முடிவு என்கிறாய்
அது தொடக்கமாகவும் இருப்பதை
நீ கவனித்ததில்லையா?

ஒரு பூவின் மரணத்தில்தான்
காய் பிறக்கிறது

கன்னிமையின் மரணத்தில்தான்
தாய்மை பிறக்கிறது

மரணம் என்றால் அழிவு என்கிறாய்
அது நிறைவு என்பதை
நீ கவனித்ததில்லையா?

ஒரு ராகம்
நிறைவடையும் போது
நின்று போகிறதல்லவா?

*கவிக்கோ அப்துல் ரகுமான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் மந்திரங்கள்

## தொகுப்பு: இளங்குமரனார்
## திருவள்ளுவர் தவச்சாலை, தமிழ்நாடு.

- அகர முதலாம் ஆதியே போற்றி
- மலர்மிசை ஏகும் மாணடி போற்றி
- தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி
- எண்குணத் திலங்கும் இறையே போற்றி
- அமிழ்த மழையாம் அருளே போற்றி
- ஐம்பொறி அடங்கும் ஆற்றலே போற்றி
- நிறைமொழி அருளும் நிறைவே போற்றி
- குணமெனும் குன்றே குறியே போற்றி
- மனத்தில் மாசிலா மணியே போற்றி
- அன்பும் அறனும் இல்வாழ்வின் பண்பும் பயனுமாம் போற்றி
- வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி
- மங்கல மனையற மாட்சியே போற்றி
- அறிவறி பண்புப் பேறே போற்றி
- அன்போ டியைந்த வழக்கே போற்றி
- வருவிருந் தோம்பும் வளமே போற்றி
- இன்சொல் வழங்கும் இயல்பே போற்றி
- செய்யாமற் செய்யும் செழுநலம் போற்றி
- காலத் துதவும் கனிவே போற்றி
- நெஞ்சங் கோடா நெறிநிலை போற்றி
- நிலையில் திரியா மலையே போற்றி
- ஒழுக்கம் குறையா உரமே போற்றி
- பொறுக்கும் அழியாப் புகழே போற்றி
- அழுக்கா றில்லா அறனே போற்றி
- அறனறிந்து வெஃகா அறிவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புறஞ்சொலல் அறியாப் பொலிவே போற்றி
- பயனில பகராப் பண்பே போற்றி
- பிறன்கே டெண்ணாப் பெருமையே போற்றி
- ஒத்த தறியும் உயர்வே போற்றி
- ஊருணி நீராம் உடைமையே போற்றி
- பயன்மரம் ஆகும் பரிவே போற்றி
- மருந்து நலமாம் மாண்பே போற்றி
- வறியார்க் குதவும் வாழ்வே போற்றி
- பசித்துயர் மாற்றும் பரமே போற்றி
- வசையிலாப் புகழே வானே போற்றி
- தன்னுயிர் அஞ்சாத் தகவே போற்றி
- அல்லல் அறியா அகலே போற்றி
- உயிரழித் துண்ணா ஒளியே போற்றி
- தன்னுயிர் தானறு தவமே போற்றி
- தம் கருமம் செய் தவமே போற்றி
- கூற்றையும் வெல்லும் நோற்றலே போற்றி
- அளவறி நெஞ்சத் தறமே போற்றி
- உள்ளத்தாற் பொய்யா ஒழுக்கம் போற்றி
- வெகுளியை மறக்கும் விரிவே போற்றி
- இன்னாமை எண்ணா இனிமையே போற்றி
- பகுத்துண் டோம்பும் பரிவே போற்றி
- நிலைபே றுணரும் நிலையே போற்றி
- பற்றது பற்றாப் பற்றே போற்றி
- மெய்ப்பொருள் உணரும் மேன்மையே போற்றி
- ஐயம் அணுகாத் தெளிவே போற்றி
- சிறப்பெனும் செம் பொருட் செறிவே போற்றி
- பேரா இயற்கைப் பெற்றியே போற்றி
- அசையா உறுதி ஆக்கமே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முறை செய் தருளும் இறையே போற்றி
- உலகின் புறத்தா னின்புறவே போற்றி
- நுண்மான் நுழைபுல நோன்பே போற்றி
- ஆவ தறியும் அறிவே போற்றி
- எதிரதாக் காக்கும் அறிவே போற்றி
- வருமுன் காக்கும் வாழ்வே போற்றி
- அறனறி மூத்த அறிவே போற்றி
- பெரியரிற் பெரிய பேறே போற்றி
- மன்னுயிர்க் காக்க மனநலம் போற்றி
- தக்கதே செய்யும் தகைமையே போற்றி
- அமைந்தாங் கொழுகும் அளவே போற்றி
- செய்தற் கரிய செய்கையை போற்றி
- அஃசாத் துணிவே துணையே போற்றி
- திறந்தெரிந் தறியும் தெளிவே போற்றி
- வாரி பெருக்கும் வகையே போற்றி
- அளவ ளாவும் அமிழ்தே போற்றி
- சுற்றம் சுற்றும் சுடரே போற்றி
- புகழ்ந்தவே புரியும் புகழே போற்றி
- கோலது கோடாக் கொற்றமே போற்றி
- குடிபுறங் காக்கும் குணமே போற்றி
- ஒத்தாங் கொறுக்கும் உரனே போற்றி
- கண்ணோட்டம் என்னும் கவினே போற்றி
- உள்ளம் உடைமையாம் உடைமையே போற்றி
- நீரள வுயரும் மலருளம் போற்றி
- குடியெனும் குன்றா விளக்கே போற்றி
- அறவறிந் தாற்றும் ஆள்வினை போற்றி
- அடுக்கும் இடுக்கண் அழிப்பாய் போற்றி
- இன்பத் தின்பம் விரும்பாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மதிநுட்பம் நூலோடுடையாய் போற்றி
- உலகத் தியற்கை உணர்வோய் போற்றி
- நிரந்தினிது சொல்லும் நீர்மையே போற்றி
- வேண்டிய எலாம்தரும் வினைநலம் போற்றி
- நடுக்கறு காட்சி நயனே போற்றி
- சொல்லிய செய்யும் சுடரே போற்றி
- வீறெய்து மாண்பாம் வினைத்திறம் போற்றி
- நூலாருள் நூல்வல்ல நுண்மையே போற்றி
- தூய்மை துணைமை துணிவே போற்றி
- போற்றிற் கரியவை போற்றியே போற்றி
- குறிப்பிற் குறிப்புணர் குறிப்பே போற்றி
- ஒளியார் முன்னுறும் ஒளியே போற்றி
- கற்றவை செலச்சொல் கலையே போற்றி
- நாடா வளத்ததாம் நாடே போற்றி
- அன்பின் குழவியாம் அருளே போற்றி
- அருள்வளர் செவிலிப் பொருளே போற்றி
- நிறைநீர நீரவர் கேண்மையே போற்றி
- உள்ளம் பெருகுவ உள்ளுநகை போற்றி
- கேளிழுக்கம் கேளாக் கெழுதகை போற்றி
- இகலெனும் எவ்வம் இல்லாய் போற்றி
- பகைநட்பாக் கொள்ளும் பண்பே போற்றி
- அளவறிந் துண்ணும் அறிவே போற்றி
- செப்பமும் நாணும் சேர்வே போற்றி
- பெருக்கத்து வேண்டும் பணிவே போற்றி
- உள்ள வெறுக்கையாம் ஒளியே போற்றி
- கொல்லா நலத்ததாம் நோன்மையே போற்றி
- சீருடைச் செல்வ மாரியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கருமத்தால் நாணும் நாணே போற்றி

அகர முதலாம் ஆதியே போற்றி போற்றி

திருக்குறளை ஓதினால் உயர்வு கிட்டும்.
திருக்குறளை ஓதினால் பண்பாடு தானே வரும்.
திருக்குறளை ஓதினால் மனமாசு ஒழியும்.
திருக்குறளை ஓதினால் தெய்வநிலை எய்தலாம்.

ஆதலால் திருக்குறளை ஓதிச் சீரும் சிறப்பும்
பேரும் பெருமையும் வாழ்வும் வளமும் பெற்றுச்
சிறப்பெனும் செம்பொருள் கண்டு பேராப்
பெரு நிலை எய்தலாம்.

ஆதலால் இதனை ஓதியும் உணர்ந்தும்
வழிபட்டும் ஒளிமிக்க வாழ்வை
ஒவ்வொருவரும் அடைவாராக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் மொழிபெயர்ப்புகளும், பதிப்புகளும்

*தொகுப்பு: அழகப்பா ராம்மோகன்*

நாளிதுவரை நரிக்குறவரின் மொழியான வக்கிரபோலி முதலியவற்றைச் சேர்த்து 34 மொழிகளில் 130 மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

ஆங்கிலத்தில் மட்டும் ஏறத்தாழ நாற்பதுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன.

திருக்குளறின் முதல் மொழிபெயர்ப்பு முதன் முதலில் 1730 ஆம் ஆண்டு இலத்தீன் மொழியல் வீரமா முனிவர் என்ற Rev. Fr. Constantius Beschi என்பவரால் செய்யப்பட்டது.

தமிழில் 1811 முதல் 1999 வரை திருக்குறள் பதிப்புகள் நூற்றுக்கு மேல் தமிழகத்தில் வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன 54 பதிப்புகள். அவைகளின் விவரம் கட்டுரையில் காண்க.

போலந்து மொழியில் திருக்குறள் வெளியிடப்பட்ட போது ஏழுநாட்களில் ஒரு நூறாயிரம் படிகள் விற்பனை ஆகியுள்ளன.

## Tirukkural Translations:

English:
1784 - Kindersley (NE)
1812 - Ellis (FW)
1840 - Drew (WH)
1871 - Gover (Charles E)
1878 - Robinson (Edward Jewitt)
1886 - Drew & Lazarus (J)
1886 - Pope (GU)
1916 - Thirunavukkarasu (M T)
1916 - Aiyer (WS)
1919 - Vadivelu Chettiar (K)
1925 - Madhavayya (A)
1926 - Michael (SM)
1927 - Purnalingam Pillai (MS)
1931 - Popley (HA)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933 - Aranganatha Mudaliyar (A)
1937 - Rajagopalachari (C)
1949 - Ramachandra Dikshitar (VR)
1950 - Rajagopala Aiyangar (MR)
1958 - Chakravarthi (A)
1955 - Thangaswami (ID)
1955 - Sethupillai (RP)
1962 - Balasubramaniyam (KM)
1965 - Muthuswamy (K)
1968 - Soundrarajan (CR)
1968 - Suddaranda Bharathair
1969 - Vanmikanathan
1969 - Kasturi Srinivasan
1975 - SiNathan
1982 - T. N. S. Rashavachari (TNS)
1982 - DIAZ (SM)
1988 - Srinivasa Iyengar (KR)
1991 - P. S. Sundaram
1994 - Rasipuram Ramabadran
1999 - J.Narayannaswamy
1999 - Sivaya Subramaniyaswami

Latin:
1730 - Beschivs
1865 - Graul

French:
1767 - Namelenanthov
1848 - Ariel (E)
1854 - Dedumast (PG)
1867 - Jacolliot (Louis)
1867 - Lamairesse (M)
1889 - De Bavrigurde Fontainiew
1942 - Diagov (Gnana)

Russian:
1963 - Ilasov (Yury)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sanskrit:
1922 - Appa Dikshitar
1961 - Srirama Desikan
1942 - Govindarai Jain

Sinhalese:
1961 - Misigamy (Miss)

Hindi:
1924 - Kshemanand Rahit
1952 - Jain (PT)
1958 - Shankar Raju Naidu (S)
1964 - Venkatakrishnan (MG)

Marathi:
1948 - Sane (PS)

Gujarathi:
1931 - Najnklal Choksi

Bengali:
1937 - Nalini Mohan Sanyal In Progven - E.C. Shastri

Urudu:
1965 - Hasrat Suharwavdy

Malayalam:
1915 - Govinda Pillai
1951 - Damodaram Pillai
1957 - Gopalakurup (Vennikulam)
1957 - Ramakrishna Pillai
1894 - Perunalli Krishnavathiyan
1899 - Alegathu Kurup
1963 - Bhaskaran Nair
1966 - Pavameswaran

Kannada:
1955 - KundappaL
1940 - Srikandayya (PM)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Telungu:
1877 - Vaidyanatha Natha
1892 - Narasimhalu Naidu
1948 - Sriramula Reddy
1952 - Jagganna Sastri
1954 - Radhakrishna Sarma
1955 - Jalayya Nitisudha
1955 - Gopala Rao
1955 - Sathyanarayana

Malay:
1964 - Inje Ramu Bin Haji Thakir
1964 - Ismail Hussein

Burmese:
1984 - Umyo Thant

Fiji:
1964 - Berwick

German:
1803 - Cammerer (AF)
1847 - Ruckert (Friederich)
1854 - Gravl (Kavl)

Polish:
Polish translations was publish

Chinese:
1967 - Cheeng Hsi

Dutch:
1694 - Tirukkural was referenced by D Kat

Spanish:
1968 - G. Arul

Swedish:
Inprosven - Rev. Y. Frykolm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# North American Country's States / Province & Capital Cities

## CANADA
Ottawa

| Province / Territory | | Capital |
|---|---|---|
| AB | Alberta | Edmonton |
| BC | British Columbia | Victoria |
| MB | Manitoba | Winnipeg |
| NB | New Burnswick | Fredericton |
| NF | Newfoundland | St. John's |
| NT | Northwest Territories | Yellowknife |
| NT | Nunavut | Iqaluit |
| NS | Nova Scotia | Halifax |
| ON | Ontario | Toronto |
| PEI | Prince Edward Island | Charlottetown |
| QC | Quebec | Quebec City |
| SK | Saskatchewan | Regina |
| YK | Yukon | Whitehorse |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNITED STATES
## Washington, D.C.

| State | | Capital |
|---|---|---|
| AL | Alabama | Montgomery |
| AK | Alska | Juneau |
| AZ | Arizona | Phoenix |
| AR | Arkansan | Little Rock |
| CA | California | Sacramento |
| CO | Colarado | Denver |
| CT | Connecticut | Hartford |
| DE | Delaware | Dover |
| FL | Florida | Tallahassee |
| GA | Georgia | Atlanta |
| HI | Hawaii | Honolulu |
| ID | Idaho | Boise |
| IL | Illinois | Springfield |
| IN | Indiana | Indianapolis |
| IA | Iowa | Des Moines |
| KS | Kansas | Topeka |
| KY | Kentucky | Frankfort |
| LA | Louisiana | Baton Rouge |
| ME | Maine | Augusta |
| MD | Maryland | Annapolis |
| MA | Massachusetts | Boston |
| MI | Michigan | Lansing |
| MN | Minnesota | St. Paul |
| MS | Mississippi | Jackson |
| MO | Missouri | Jefferson City |
| MT | Montana | Helena |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| NE | Nebraska | Lincoln |
| NV | Nevada | Carson City |
| NH | New Hampshire | Concord |
| NJ | New Jersey | Trenton |
| NM | New Mexico | Santa Fe |
| NY | New York | Albany |
| NC | North Carolina | Raleigh |
| ND | North Dakota | Bismarck |
| OH | Ohio | Columbus |
| OK | Oklahoma | OKlahoma City |
| OR | Oregon | Salem |
| PA | Pennsylvania | Harrisburg |
| RI | RHode Island | Rhode Island |
| SC | South Carolina | Columbia |
| SD | South Dakota | Pierre |
| TN | Tennessee | Nashville |
| TX | Texas | Austin |
| UT | Utah | Salt Lake City |
| VT | Vermont | Montpelier |
| VA | Virginia | Richmond |
| WA | Washington | Olympia |
| WV | West Virginia | Charleston |
| WI | Wisconsin | Madison |
| WY | Wyoming | Cheyenne |
| PR | Puerto Rico | San Juan |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mexico
## Mexico City

| | |
|---|---|
| Aguascalientes | Aguascalientes |
| Baja California Norte | Mexicali |
| Baja Californai Sur | La Paz |
| Campeche | Campeche |
| Chiapas | Tuxtla Gutierrez |
| Chihuahua | Chihuahua |
| Coahuila | Saltillo |
| Colima | Colima |
| Durango | Durango |
| Guanajuato | Gunajuato |
| Guerrero | Chilpancingo |
| Hidalgo | Pachuca |
| Jalisco | Guadalajara |
| Mexico | Toluca |
| Michocan | Morelia |
| Morelos | Cuernavaca |
| Nayarit | Tepic |
| Nuevo Leon | Monterrey |
| Oaxaca | Oaxaca |
| Puebla | Puebla |
| Queretaro | Queretaro |
| Quintana Roo | Chetumal |
| San Luis Potosi | San Luis Potosi |
| Sinaloa | Culiacan |
| Sonora | Hermosillo |
| Tabasco | Villahermosa |
| Tamaulipas | Ciudad Victoria |
| Tlaxcala | Tlaxcala |
| Veracruz | Jalapa |
| Yucatan | Merida |
| Zacatecas | Zacatecas |
| Federal District | Mexico City |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளின் தலை நகரங்களும், நாணயமும்

| நாடு | தலைநகர் | நாணயம் |
|---|---|---|
| ➢ ஆப்கானிஸ்தான் | காபுல் | ஆப்பானி |
| ➢ ஆர்ஜன்டீனா | புவனர்ஸ் அயர்ஸ் | பெசோ |
| ➢ அவுஸ்திரேலியா | கன்பெரா | டொலர் |
| ➢ ஆஸ்திரியா | வியன்னா | சில்லிங் |
| ➢ பெல்ஜியம் | பிரசல்ஸ் | பிரங் |
| ➢ பிரசில் | பிரசிலியா | குருசைறு |
| ➢ பல்கேரியா | சொபியா | லெவ் |
| ➢ பர்மா | இரங்கூன் | கியற்று |
| ➢ கனடா | ஒட்டாவா | டொலர் |
| ➢ எகிப்து | கைரோ | பவுண் |
| ➢ சீனா | பீஜிங் | யுவான் |
| ➢ கியுபா | ஹவானா | பெசோ |
| ➢ கொஸ்டரிகா | சென்ஜோன்ஸ் | கோலன் |
| ➢ கொலம்பியா | பொகொட்ட | பெசோ |
| ➢ டென்மார்க் | கொபன்ஹேகன் | குரோனா |
| ➢ செக்கோஸ்லவேகியா | பிராஹ் | கோருன் |
| ➢ எல்சல்வடோர் | செண்கல்வடோர் | கோலன் |
| ➢ பின்லாந்து | ஹெல்சிங்கி | மார்க் |
| ➢ எதியொப்பியா | அடிஸ்அபாபா | டொலர் |
| ➢ கயானா | ஜோர்ஜ்டவுண் | டொலர் |
| ➢ பிரான்ஸ் | பரிஸ் | பிராங் |
| ➢ சைபிரஸ் | நிகோசியா | பவுண் |
| ➢ ஜெர்மனி | பொன் | மார்க் |
| ➢ கிரேக்கம் | எதென்ஸ் | திராச்சமா |
| ➢ ஐக்கியஅரபு எமிரேட்ஸ் | அபூதாபி | திர்கம் |
| ➢ ஐக்கிய அமெரிக்கா | வாஷிங்டன் | டொலர் |
| ➢ ஹங்கேரி | புடாபெஸ்ட் | போரின்று |
| ➢ ஐஸ்லாந்து | ரெக்ஜேவிக் | குரானா |
| ➢ இந்தியா | புதுடெல்லி | ரூபா |
| ➢ யுகெஸ்லேவியா | பெல்கிரேட் | தினார் |
| ➢ குவைத் | குவைத் சிட்டி | தினார் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ➢ இந்தோனேசியா | யகர்த்தா | ரூபா |
| ➢ ஈராக் | பக்தாத் | தினார் |
| ➢ ஈரான் | தெஹ்ரான்ரியால் | ரியால் |
| ➢ இஸ்ரேல் | தெல் அவிவ் | பவுண் |
| ➢ இத்தாலி | ரோம் | லீரா |
| ➢ ஜமேகா | கிங்ஸ்டன் | டொலர் |
| ➢ யப்பான் | டோக்கியோ | யென் |
| ➢ ஜோர்டான் | அம்மான் | தீனார் |
| ➢ லெபனான் | பெய்ரூட் | பவுண் |
| ➢ வடகொரியா | புய்ன்யாங் | வோண் |
| ➢ தென்கொரியா | சியோல் | வோண் |
| ➢ மலேசியா | போலாலம்பூர் | டொலர் |
| ➢ மெக்சிக்கோ | மெக்சியோ | பெசோ |
| ➢ மொரோகோ | ரபாட் | செல்ஹாம் |
| ➢ நெதர்லாந்து | அம்ஸ்ஸடாம் | கில்டர் |
| ➢ நியூசிலாந்து | வெலிங்டன் | டொலர் |
| ➢ நோர்வே | ஒஸ்லோ | கிரான் |
| ➢ பாகிஸ்தான் | இஸ்லாமபாத் | ரூபா |
| ➢ பேரு | லீமா | சால் |
| ➢ சுவிடன் | ஸ்டொக்ஹோம் | குரோன் |
| ➢ ஸ்பெயின் | மட்ரிட் | பெசோ |
| ➢ தென் ஆபிரிக்கா | பிரிடோரியா | ருண்ட |
| ➢ ருமேனியா | புக்காரஸ்ட் | லெவ் |
| ➢ போர்த்துக்கல் | லிஸ்பன் | எஸ்குடா |
| ➢ போலாந்து | வார்சோ | சுலாட்டி |
| ➢ பிலிப்பைன்ஸ் | மணிலா | பெசோ |
| ➢ ஐக்கிய இராச்சியம் | இலண்டன் | பவுண் |
| ➢ சுவிட்சலாந்து | பேர்ண் | பிராங் |
| ➢ சிரியா | டமஸ்கஸ் | பவுண் |
| ➢ வியட்நாம் | சைகோன் | டோங் |
| ➢ இரசியா | மொஸ்கோ | ரூபிள் |
| ➢ துருக்கி | அங்காரா | லீரா |
| ➢ தாய்லாந்து | பேங்கொக் | பாஹாத் |
| ➢ மாலைதீவு | மாலே | ருபியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முக்கியமான விமான நிலையங்கள்

| விமான நிலையம் | நகரம் | நாடு |
|---|---|---|
| ❖ செரி மவ்ருவோ | மொஸ்கோ | இரசியா |
| ❖ லாகார்டியா | நியூயோர்கக் | ஐக்கிய அமெரிக்கா |
| ❖ மீனம்பாக்கம் | சென்னை | இந்தியா |
| ❖ சாந்தா குருஸ் | பம்பாய் | இந்தியா |
| ❖ டம் டம் | கல்கத்தா | இந்தியா |
| ❖ பாலம் | புதுதில்லி | இந்தியா |
| ❖ ஹீத்ரோ | ---------------- | இலண்டன் |
| ❖ கட்விக் | ---------------- | இலண்டன் |
| ❖ காஸ்டரப் | கோபன்ஹேகான் | டென்மார்க் |
| ❖ ஓர்ளி | பரிஸ் | பிரான்ஸ் |
| ❖ சால்ஸ் டிகோல் | பரிஸ் | பிரான்ஸ் |
| ❖ லீபியுரோகேட | பரிஸ் | பிரான்ஸ் |
| ❖ நரிடா | டோக்கியோ | யப்பான் |
| ❖ ஹனிடா | டோக்கியோ | யப்பான் |
| ❖ அர்னிண்டா | ஸ்டகடகோம் | நோர்வே |
| ❖ கிங்காலித் | ரியாத் | சவுதி அரேபியா |
| ❖ பிராங்பேட் | பேர்லின் | யெர்மனி |
| ❖ மியுனிச் ருயில் | டெகல் | யெர்மனி |
| ❖ மீலான் | மல்பென்ஸா | இத்தாலி |
| ❖ துயமன்னே | மெல்போன் | அவுஸ்திரேலியா |
| ❖ கிங்போட் சிமித் | சிட்னி | அவுஸ்திரேலியா |
| ❖ லெட் | டெல் அவில் | இசுரேல் |
| ❖ டொர்வல் | மொன்றியல் | கனடா |
| ❖ பியர்சன் | ராறொன்ரோ | கனடா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சின்னங்கள்

| நாடு | சின்னம் |
|---|---|
| அமெரிக்கா | தங்கத் தடி |
| அவுஸ்திரேலியா | கங்காரு |
| அயர்லாந்து | ஹப்ரக் மலர் |
| பிரான்ஸ் | அல்லி மலர் |
| பிரித்தானியா | ரோஜா மலரே |
| கனடா | வெள்ளை மலர் |
| டென்மார்க் | கடற்கலைச் செடி |
| இந்தியா | சிங்கத்தின் தலை |
| ஈரான் | ரோஜா மலர் |
| யப்பான் | கூட்டுப் புழு |
| பாகிஸ்தான் | பிறை |
| ஜெர்மனி | கான் பூ |
| ஸ்பெயின் | பிறை |
| சுவிட்சர்லாந்து | இடல்விஸ் மலர் |
| பெல்ஜியம் | அசலியா மலர் |
| ருமேனியா | பூவரசம் பூ |
| எகிப்து | தாமரை பூ |
| சீனா | திராட்சை மலர் |
| போலாந்து | சோலி மலர் |
| ஈராக் | சிவப்பு ரோஜா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச குறியீடுகள்

| | |
|---|---|
| • ஒலிவ் மரத்தின் இலை | சமாதானம் |
| • புறா | சமாதானம் |
| • வெள்ளைக் கொடி | சமாதானம் |
| • சக்கரம் | வளர்ச்சியைக் குறிக்கும் |
| • தாமரை | பண்பாடு (ம) நாகரிகம் |
| • கறுப்புத் துண்டு (அ) துணி | துக்கம் |
| • கறுப்புக் கொடி | எதிர்ப்பு |
| • எலும்பு நடுவில் மண்டையோடு | ஆபத்து |
| • சிவப்பு விளக்கு | மருத்துவமனை, ஆபத்து (ம) நிறுத்து |
| • செஞ்சிலுவை | செஞ்சிலுவைச் சங்கம், மருத்துவ மனை (ம) உதவி |
| • செம்பிறை | அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம் |
| • கண்கட்டப்பட்டுக் கையில் தராசுடைய பெண் | நீதி |
| • சிவப்புக் கொடி | புரட்சி (உலகத் தொழிலாளர் சங்க அமைப்பு) |
| • அரைக்கம்பத்தில் கொடி | இரங்கல் |
| • தலைகீழாக கொடி | துன்பம் |
| • செங்குத்தாக கொடி | வெற்றி (அ) ஆரம்பம் |
| • மஞ்சள் கொடி (கப்பலில் மட்டும்) | தொற்று நோய் |
| • வெள்ளைக் கொடி | பௌத்தர்கள் துக்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்?

மகனே! என அழைக்கிறாள் தாய்
நான் மகனாகிறேன்
தம்பி! என அழைக்கிறான் அண்ணன்
நான் தம்பியாகிறேன்
அண்ணா! என அழைக்கிறாள் தங்கை
நான் அண்ணனாகிறேன்
அத்தான்! என அழைக்கிறாள் மனைவி
நான் அத்தானாகிறேன்
அப்பா! என அழைக்கிறாள் மகள்
நான் அப்பாவாகிறேன்
ஒவ்வோர் உறவினரும்
ஒவ்வோர் உறவுப் பெயரால்
என்னை அழைக்கின்றனர்
அப்போது நான் அந்த உறவாக
ஆகி விடுகிறேன்
ஒவ்வோர் அழைப்பிற்கும்
நான் ஒவ்வொரு விதமாக
நடக்கிறேன்
நடக்கிறேனா?
நடிக்கிறேனா?
தெரியவில்லை
வாழ்க்கை என்ற ஒரே நாடகத்தில்
எனக்கு எத்தனை பாத்திரங்கள்?
ஒவ்வொரு பாத்திரமாகும் போதும்
அதற்கேற்ப வசனத்தைப் பேசுகிறேன்
இந்த நாடகத்தில்
என் சொந்தப் பேச்சுக்கு
இடமில்லாமல் போகிறது
வயது என்னைச்
செதுக்கிக்கொண்டே
இருக்கிறது
தனியாக இருக்கும் போதும்
நான் நானாக இருக்க முடியவில்லை
நான் என்று
தனியே ஒன்று உண்டா?

*கவிக்கோ அப்துல் ரகுமான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் துடைக்க நீண்ட கரங்களுக்கு......

அன்னாரை இழந்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் நாலாத் திசைகளில் இருந்தும் துயர் துடைக்கவென ஆயிரமாய்க் கரங்கள் நீண்டன உங்கள் கரங்கள். நம்மை முழுமையாய் ஆட்படுத்திய தீராத்துயரில் இருந்து நாம் சிறிதேனும் மீண்டுவர உங்கள் அருகாமையும் ஆறுதலுமே பெரிதும் உதவின. உங்கள் ஒவ்வொருவரினதும் கரம் பற்றி கண்ணில் ஒற்றி நன்றி சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம்.

கூடவே வந்திருந்து வேதனையை நீவி விட்டோருக்கும்,
அவ்வப்போது ஆறுதலாய் வந்து போனவர்களுக்கும்,
புது வருடம் என்றும் பொருட்படுத்தாமல் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு ஆறுதல் தந்தோருக்கும்,
அழுதழுது குரல் வற்றி வாடியபோதெல்லாம் குடல் வற்றிப் போகாது அமுதூட்டி விட்டோருக்கும்,
தூர தேசங்களில் இருந்தும், தாயகத்தில் இருந்தும் தொலைபேசியில் சிரமம் பாராது ஆறுதல் வார்த்தைகள் உதிர்த்தோருக்கும்,
மற்றும் பல்வேறு வகையாக உதவியோருக்கும்,

*எம் உள்ளம் நெகிழும் நன்றி.*

அதேவேளை, உடன் பிறந்தானின் பிரிவு கண்டு தாளமாட்டாது, சுவிஸ் நாட்டில் இருந்து விரைந்தோடிவந்து குடும்பத்தாரை அரவணைத்து ஆறுதல் சொன்ன பாபுவிற்கும்,
உறவின் அகல்வு கண்டு பதறி விரைந்து வந்த திரு. சிவனடிக்கும்,
ஆறுதல் சொல்லவென அமெரிக்காவில் இருந்து வந்த திரு. கமலநாதனுக்கும்,
கொழும்பில் அன்னாருடன் கூடவே இருந்தவரும், இத் துயரச் செய்தியைத் தாயகத்தில் பலருக்கு அறிவித்தவரும், அடிக்கடி தொடர்பு கொண்டு ஆறுதல் தந்த திரு சிவராமலிங்கம் அவர்களுக்கும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவே இருந்து துயர் பகிர்ந்து கொண்ட, Hertz ஊழியர்களுக்கும், Sandyline, Slim - Line நிறுவனத்தினருக்கும், Wilclay Public School ஆசிரியர், மாணவர்களுக்கும், அன்னாரின் நினைவு சுமந்து பிரிவின் துயரைப் பகிர்ந்து கொண்ட கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலய தோழர், தோழிகளுக்கும்,

இந்த நினைவு மலர் உருவாக்கத்தில் பெரிதும் உதவிய கருணாகரன் ரவிக்கும்,
அன்னாரின் பள்ளித் தோழர் பொன்னையா விவேகானந்தனுக்கும், கனடியத் தமிழ் வானொலி, T. V. I தொலைக்காட்சிக்கும்,

*எமது இதயம் கசியும் நன்றிகள் பல.*

*மீண்டும்,*
*இழப்பில் இருந்து நாம் உயிர்த்தெழ உதவிய அனைத்து நெஞ்சங்களையும் நன்றியுணர்வுடன் நனைத்துக் கொள்கின்றோம்.*




*நன்றியோடு*
*மனைவி பிள்ளைகள், மற்றும்*
*பெற்றோர், சகோதரர், மைத்துனர் குடும்பத்தார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கின்றதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகின்றாய்?

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையாகிறது.

மற்றொரு நாள் அதுவே வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதி ஆகும்.



Printed by Viveka Printers, 416-410-6401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் வணக்கம்

| உறவு | அகல்வு |
|---|---|
| 01 | 08 |
| 11 | 04 |
| 1963 | 2003 |



## அமரர் பூபாலன் சுதாகரன்

நகர்ந்த நாட்களில்
நாம் எனக் குறித்தவற்றுக்குள்
எல்லாம் நீ இருந்தாய்....
இனியும்,
உன் வெற்றிடத்தில்
நீயே இருப்பாய்.

பள்ளித் தோழர்கள், தோழிகள்
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org